**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 139/2021**

**07.02.2026.**

**DW - 1**

**பி.வா.சா.1. வீரமணி, த/பெ.ராஜாங்கம் செட்டியார் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**:

தாவா சொத்து முழுமையாக வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் - சரியல்ல. எவ்வளவு இடம் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் - சொத்தில் சரிபாதி அவருடையது சரிபாதி என்னுடையது. கிழக்கு மேற்கில் ½ அடி நீளமும், தென்வடல் 68.5 அடி நீளமும் மொத்தம் 34.5 சதுரடி எனது அனுபவத்தில் ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 500 சதுர மீட்டர் என்றால் - சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் - பிரதிவாதிக்கு எவ்வளவு சொத்து அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. 500 சதுர மீட்டர் என்பதை என்னால் மறுக்க முடியாது என்றால் - சரிதான். தாவா சொத்து என்பது எனது தகப்பனரான ராஜாங்க செட்டியாருக்கு பூர்வீக சொந்தமானது என்றால் - சரிதான். ராஜாங்க செட்டியாருக்கு இரண்டு தாரங்கள் என்றால் - சரிதான். முதல் மனைவி மூலமாக பிறந்தது கல்யாணராமன் ஆகும். 2 வது மனைவி மூலமாக நான், திருநாவுக்கரவு மற்றும் விஜயகுமார் ஆகும். ராஜாங்க செட்டியார் உயிருடன் இருக்கும் காலத்தில் 1963 ல் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் தயார்செய்யப்பட்டது என்றால் - சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின்படி எனது சகோதரர்களான விஜயகுமார், திருநாவுக்கரவு மற்றும் எனக்கும் கதவு எண்.33 வீடு ஒதுக்கப்பட்டது என்றால் - சரிதான். முதல் தார பிள்ளை கல்யாணராமனுக்கு கதவு எண். 32 ஒதுக்கப்பட்டது என்றால் - சரிதான். கல்யாணராமனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தைதான் 2023 ல் வாதிக்கு கல்யாணராமன் கிரயம் செய்துக்கொடுத்துள்ளார் என்றால் - சரிதான். 1959 ல் ராஜாங்க செட்டியார் வாங்கிய சொத்துதான் கல்யாணராமனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் - 1955 ல் ராஜாங்க செட்டியார் சொத்து வாங்கினார். அந்த சொத்துதான் ஒதுக்கீடு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணம் தான் 1959 ல் ராஜாங்க செட்டியார் வாங்கிய கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் - சரிதான். அந்த சொத்துதான் 1963 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் கல்யாணராமனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் - சரிதான். பாகப்பிரிவினையின்போது 32 ல் மட்டும் தான் வீடு இருந்தது என்றால் - சரியல்ல. 32, 33 க்கு இடையில் ஒரே தாய் சுவர் கொண்ட ஒரே வீடாக ஒட்டியிருந்தது. தாய் சுவற்றின் நீளம் சுமார் 50 அடி இருந்திருக்குமா என்றால் - இல்லை. 150 அடிக்கு மேல் இருக்கும். சுவர் மட்டும் இருந்ததா அல்லது 150 அடி நீளத்திற்கும் கட்டிடம் இருந்ததா என்றால் - 150 அடி நீளத்திற்கும் இரண்டு வீடாக இருந்தது. நான் அந்த வீட்டில் இருந்ததால் 150 அடி என்று சொல்கிறேன். 1963 ல் எனது வயது என்னவென்றால் - 6 அல்லது 7 வயதிருக்கும். 7 வயதில் எனக்கு எங்கு வீடு இருந்தது என்றும் எங்கு சுவர் இருந்தது என்று எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் - என் தகப்பனார் சொல்லி தெரியும். என் தகப்பனார் எந்த சூழ்நிலையில் அவ்வாறு சொன்னார் என்றால் - என் தகப்பனாரும் சொல்லியுள்ளார். 7 வயதிலிருந்தே எனக்கும் தெரியும். என் தகப்பனார் எந்த சூழ்நிலையில், எப்போது என்ன சொன்னார் என்றால் - ஞாபகம் இல்லை. 150

அடி நீளம் சுவர் இருந்ததற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சாட்சி பி.வா.சா.ஆ.5 னை பார்வையிட்டு அதில் அவ்வாறு குறிப்பிடவில்லை என்கிறார். ரோட்டிலிருந்து 50 அடி நீளத்திற்கு தான் வீடு இருந்தது என்றும் அந்த இரண்டு வீட்டிற்கும் பொதுவாக ஒரு தாய்சுவர் தான் இருந்தது என்றால் - சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள போட்டோக்களை நான் மறுக்கிறேன். அனைத்து போட்டோக்கள், சிடி முழுவதையும் நான் மறுக்கிறேன். தாய் சுவற்றின் அகலம் 1.1/2 அடி என்றால் - சரிதான். எவ்வளவு நீளத்திற்கு 1.1/2 அடி இருக்கும் என்றால் - ரோட்டிலிருந்து 73 அடி நீளத்திற்கு 1.1/2 அகல சுவரும் அதன்பின்னர் ¾ அடி சுவராக 68.1/2 நீளத்திற்கும் உளளது. பிரதிவாதி கல்யாணராமனுக்கு பாகம் ஒதுக்கப்பட்டபோது தாய் சுவற்றில் 1.1/2 அகல சுவற்றில் பாதியும் எனக்கும் எனது சகோதரர் திருநாவுக்கரசுக்கும் பாதியுமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் - சரிதான். தாய் சுவற்றில் பாதி பாகத்தினை 1984 ல் கல்யாணராமன் இடித்துவிட்டார் என்றால் - 2012 வரை இடிக்கவில்லை. எனது பக்கம் உள்ள தாய்சுவற்றினை நான் எப்போது இடித்தேன் என்றால் - 2012 ல் எனக்கு பாகம் ஒதுக்கும்போது இடித்துவிட்டேன். கல்யாணராமனும் நாங்களும் அவரவரது பாகங்களை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் - சரிதான். கல்யாணராமனும் நாங்களும் அவரவரது இடங்களுக்கு தனித்தனியாக சுவர் கட்டி அவரவர் பாகத்தை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் - கல்யாணராமன் தாய் சுவற்றை இடிக்கவில்லை. தற்போது, தாய் சுவற்றை யாருமே இடிக்கவில்லை என்று சாட்சி கூறுகிறார். தாய் சுவற்றை காட்டக்கூடிய போட்டோவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. 2012 ல் எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பாகப்பிரிவினைக்கு பிறகு தாய் சுவற்றை விட்டுவிட்டு மற்ற இடத்தை இடித்துவிட்டு வீடு கட்டியுள்ளேன். அந்த தாய் சுவற்றில் பாதி இடத்திற்காக தான் வழக்கு போட்டுள்ளேன். தாய் சுவற்றில் ½ கேட்டு நீடாமங்கலம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இன்றுவரை மேற்படி வழக்கில் தாய் சுவற்றில் ½ அடியை பொறுத்து எனக்கு எந்த தீர்ப்பும் வழங்கப்படவில்லை என்றால் - சரிதான். அவ்வாறு தீர்ப்பு வராதபோது வாதிகளை தொந்தரவு செய்வதற்கு எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் - சரிதான். இடைக்கால உறுத்துக்கட்டளைக்கு பிறகு நான் தொந்தரவு செய்யவில்லை. நீதிமன்றத்தில் காட்டப்படும் போட்டோவில் உள்ளவர்கள் நானும் எனது மனைவியும் என்றால் - இல்லை. எத்தனை போட்டோக்களை காட்டினாலும் நாங்கள் இல்லை என்று தான் சொல்வேன் என்று சாட்சி கூறுகிறார். 2021 ல் கல்யாணராமனிடமிருந்து வாதி சொத்தை வாங்கியபிறகு பிரச்சினை ஏற்பட்டதா அல்லது அதற்கு முன்பு பிரச்சினை ஏற்பட்டதா என்றால் - வாங்கிய பிறகு ஏற்பட்டது. தாய் சுவற்றை பொறுத்து பிரச்சினை ஏற்பட்டது. அதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2021 ல் வாதி தாவா சொத்தை கிரயம் வாங்கிய பிறகு என்னையையும் வாதியையும் வட்டாட்சியர் அலுவலகத்தில் அழைத்து விசாரித்தார்களா என்றால் - விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். நான் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் 34.1/2 அடியை என்னை அனுபவம் செய்யவிடாமல் இருப்பதாக வாதிகள் தொந்தரவு செய்வதாக சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். 34.1/2 சதுரடி என்பது தாய் சுவற்றில் ஒரு பகுதி என்றால் - சரிதான். அந்த 34.1/2 சதுரடி ஒரு பகுதி சுவற்றை வாதி அனுபவித்து வருகிறார் என்றால் - சரிதான். அந்த இடத்தில் போய் நான் வாதியை

தொந்தரவு செய்தேன் என்றால் - சரியல்ல. 34.1/2 அடியை வாதி அனுபவம் செய்வதை நான் தொந்தரவு செய்யவில்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில், எனது ஒதுக்கப்பட்ட சொத்து காலிமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள விவரம் சரியானதா அல்லது தவறானதா என்றால் - சரிதான். காலிமனை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. 1963 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையின்போது நீள சுவர் இருந்ததாக சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு இருந்திருந்தால் எனது பதில் உரையில் சொல்லியிருப்பேன் என்றாலும் - சரியல்ல. அந்த தாய் சுவற்றின் நீளம் என்பது 55 – 60 அடி தான் இருக்கும் என்றாலும் வழக்கிற்காக நீள சுவராக இருந்தது என்று தவறாக சாட்சி அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. வாதிக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் 1980 க்கு பிறகுதான் சுவர் கட்டப்பட்டது என்றால் - சரியல்ல. வாதிக்கு விற்ற கல்யாணராமன் அவரது பாகத்தில் சுவர் கட்டினார் என்றாலும் - சரியல்ல. வாதி அனுபவம் செய்து வரும் இடத்தில் உள்ள மேற்கூரையை நான் உடைத்துவிட்டேன் என்றால் - சரியல்ல. அந்த இடததை அடையவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நான் உடைத்துள்ளேன் என்றால் -அதனை நான் மறுக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் சுவற்றில் எனக்கு தான் உரிமை உள்ளது என்று முடிவாகும்வரை வாதிக்கு நான் எந்த இடையூறும் செய்யவில்லை என்றால் - நான் எந்த தொந்தரவும் செய்யவில்லை. தாவாப்படி வாதிக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.